**சுருக்கம்**

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை – நில எடுப்பு – திருவள்ளூர் மாவட்டம் – ஊத்துக்கோட்டை வட்டம் – கல்பட்டு, ஏனம்பாக்கம், மேல்மாளிகைப்பட்டு, செங்காத்தாகுளம், எர்ணாங்குப்பம் ஆகிய கிராமங்கள் மற்றும் திருவள்ளூர் வட்டம், வெங்கல் கிராமம் – 689.49.42 ஹெக்டேர்ஸ் நிலங்களை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ), தமிழ்நாடு அறிவு நகரம் (Tamil Nadu Knowledge City) அமைப்பதற்காக தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்பு சட்டம், 1997–ன் கீழ் நில எடுப்பு செய்திட மற்றும் நில உரிமை மாற்றம் செய்திட அரசின் நிர்வாக அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக (எம்ஐஇ.1) துறை</u>

**அரசாணை (நிலை) எண். 148** | **நாள் 01.08.2023**

**சோபகிருது வருடம், ஆடி 16**
**திருவள்ளுவர் ஆண்டு 2054**
**படிக்கப்பட்டது:**

1. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் அவர்களின் கடித எண். LA/Tamil Nadu Knowledge City/2022, நாள் 20.10.2022.
2. மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களின் கடித எண்.11398/ 2022/எப்1, நாள்: 21.12.2022.
3. நில நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.LAIV–1/ 3062878/2022, நாள்: 02.03.2023.

*****

**ஆணை:**

பார்வை 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், கல்பட்டு, ஏனம்பாக்கம், மேல்மாளிகைப்பட்டு, செங்காத்தாகுளம், எர்ணாங்குப்பம் மற்றும் திருவள்ளூர் வட்டம், வெங்கல் ஆகிய கிராமங்களில் புல எண்.49 மற்றும் பலவற்றில் உள்ள 464.27.02 ஹெக்டேர்ஸ் பரப்புடைய நன்செய், புன்செய், மானாவாரி மற்றும் 0.52.50 ஹெக்டேர்ஸ் பூமிதான நிலங்களை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ), தமிழ்நாடு அறிவு நகரம் (Tamil Nadu Knowledge City) அமைப்பதற்காக தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்பு சட்டம், 1997–ன் கீழ்/தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பு செய்திடவும் மற்றும் 224.69.90 ஹெக்டேர்ஸ் அரசு புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்திடவும் நிர்வாக அனுமதி வழங்கவும், மேற்படி நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள சிறப்புப் பணியிடங்களை தோற்றுவித்திடவும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கருத்துரு அனுப்பியுள்ளார்.

அதன்படி நில எடுப்பு மற்றும் நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள நிலங்களின் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை– 1**

| வ. எண் | கிராமங்களின் பெயர் | நில எடுப்பிற்குட்படும் நிலங்கள் | | புறம் போக்கு நிலங்கள் (ஹெக்டேரில்) | பூமிதான போர்டு நிலங்கள் (ஹெக்டேரில்) | மொத்த நிலங்கள் (ஹெக்டேரில்) |
|---|---|---|---|---|---|---|
| | | நன்செய் | புன்செய் | | | |
| 1. | கல்பட்டு | 15.55.00 | 127.93.02 | 77.51.3 | – | 220.99.32 |
| 2. | ஏனம்பாக்கம் | – | 73.38.50 | 91.07.90 | 0.42.5 | 164.88.9 |
| 3. | மேல்மாளிகைப்பட்டு | – | 143.98.50 | 41.73.2 | 0.10.00 | 185.31.7 |
| 4. | செங்காத்தாகுளம் | 4.34.00 | 88.95.50 | 8.93.00 | – | 102.22.5 |
| 5. | எர்ணாங்குப்பம் | – | 10.12.5 | – | – | 10.12.5 |
| திருவள்ளூர் வட்டம், வெங்கல் கிராம அரசு புறம்போக்கு நில விவரங்கள் | | | | | | |
| 6. | வெங்கல் | – | – | 5.44.50 | – | 5.44.50 |
| **மொத்தம்** | | 19.89.00 | 444.38.02 | 224.69.90 | 0.52.5 | 689.49.42 ஹெக்டேர் (அ) 1703.05 ஏக்கர் |

2. மேற்படி நில எடுப்பு செய்யப்படவுள்ள . நிலங்களுக்கான உத்தேச நிலமதிப்பு, தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்பு சட்டம், 1997–ன் கீழ் தனி நபர் பேச்சுவார்த்தை அடிப்படையில் நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கும் பொருட்டு கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்:

| வ. எண் | விபரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | மொத்த இழப்பீட்டுத் தொகை | ரூ. 174,52,63,590.81/– |
| 2. | நிர்வாக செலவினத் தொகை (14.5%) | ரூ. 25,30,63,220.67/– |
| | **மொத்தம்** | **ரூ. 1,99,83,26,811.48/–** |

3. இது தொடர்பாக மேற்காணும் நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக ஒரு அலகிற்கு 13 பணியிடங்கள் வீதம் 5 அலகுகள் கொண்ட சிறப்பு பணியிடங்களையும், 5 அலகுகளில் பணிபுரியும் அலுவலர்களின் பணிகளை கண்காணித்திடவும் நில எடுப்பு பணிகளை துரிதப்படுத்தவும் ஒரு தலைமையிட தனி வட்டாட்சியர் அலகிற்கு 5 பணியிடங்களையும் ஆக மொத்தம் 70 பணியிடங்களை 31.03.2026 வரை தோற்றுவிக்கவும், தமிழ்நாடு அறிவு நகரம் திட்டத்திற்கு மாநெல்லூர் சிப்காட் தொழிற்பூங்கா மாவட்ட வருவாய் அலுவலரை நில எடுப்பு அலுவலராக நியமிக்குமாறு பார்வை 3–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் நில

நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். புதிதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை-2**

| வ. எண் | பணியிடம் | தலைமையிட அலகிற்காக தோற்று விக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | 5 நில எடுப்பு அலகிற்கு தோற்று விக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | | மொத்த பணியிடங்கள் | ஊதிய நிலை |
|---|---|---|---|---|---|---|
| | | | அலகு 1-க்கு | அலகு 5-க்கு | | |
| 1. | தனி வட்டாட்சியர் | 1 | 1 | 5 | 6 | Level-20 (37700-138500) |
| 2. | முதுநிலை வருவாய் உதவியாளர் | 2 | 3 | 15 | 17 | Level-10 (20600-75900) |
| 3. | சார் ஆய்வாளர் | 0 | 2 | 10 | 10 | Level 11 (35400-130400) |
| 4. | வரைவாளர் | 0 | 1 | 5 | 5 | Level 10 (20600-75900) |
| 5. | தட்டச்சர் | 1 | 1 | 5 | 6 | Level 08 (19500-62000) |
| 6. | புல உதவியாளர் | 0 | 4 | 20 | 20 | Level 01 (15700-58100) |
| 7. | அலுவலக உதவியாளர் | 1 | 1 | 5 | 6 | Level 01 (15700-50000) |
| | மொத்தம் | 5 | 13 | 65 | 70 | |

4. இந்நில எடுப்பு பணியில் நிரப்பப்படும் பணியிடங்களில் போதுமான காலமுறை ஊதியப் பணியாளர்கள் இல்லாத நிலையில், அப்பணியிடங்களை வெளிமுகமை மூலமாக ஓய்வுபெற்ற பணியாளர்களை கொண்டு பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மாத தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்துகொள்ள அனுமதிக்க வேண்டுமாறு நில நிர்வாக ஆணையர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்:

**அட்டவணை-3**

| வ. எண் | பதவியின் பெயர் | மாதாந்திர தொகுப்பூதியம் (ஜி.எஸ்.டி மற்றும் வெளிமுகமை நிறுவனத்திற்கான நிருவாக கட்டணம் தவிர) |
|---|---|---|
| 1 | வட்டாட்சியர் | Rs.40,000/- |
| 2 | முதுநிலை வருவாய் உதவியாளர் | Rs.25,000/- |
| 3 | சார் ஆய்வாளர் (நில அளவை) | Rs.25,000/- |
| 4 | வரைவாளர் | Rs.20,000/- |
| 5 | தட்டச்சர் | Rs.20,000/- |
| 6 | அலுவலக உதவியாளர் | Rs.15,000/- |
| 7 | புல உதவியாளர். | |

5. இந்நேர்வில், வெளிமுகமை நிறுவனத்திற்கான பொருத்தமான நிர்வாக கட்டணங்கள் மற்றும் அதற்கான G.S.T ஆகியவை மேலே நிர்ணயிக்கப்பட்டுள்ள மாதாந்திர தொகுப்பூதியத்தை விட கூடுதலாக செலவிட உரிய ஆணைகள் வழங்கப்பட வேண்டும் என நில நிர்வாக ஆணையர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

6. பார்வை 2-ல் படிக்கப்பட்ட திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை ஏற்று திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், கல்பட்டு, ஏனம்பாக்கம், மேல்மாளிகைப்பட்டு, செங்காத்தாகுளம், எர்ணாங்குப்பம் மற்றும் திருவள்ளூர் வட்டம், வெங்கல் ஆகிய கிராமங்களில் புல எண்.49 மற்றும் பலவற்றில் உள்ள 464.27.02 ஹெக்டேர்ஸ் பரப்புடைய நன்செய், புன்செய், மானாவாரி மற்றும் 0.52.50 ஹெக்டேர்ஸ் பூமிதான நிலங்களை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ), தமிழ்நாடு அறிவு நகரம் (Tamil Nadu Knowledge City) அமைப்பதற்காக தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்பு சட்டம், 1997-ன் கீழ்/தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பு செய்திடவும் மற்றும் 224.69.90 ஹெக்டேர்ஸ் அரசு புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்திடவும் நிர்வாக அனுமதி மற்றும் நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள பத்தி 3-ல் கோரியுள்ளபடி மொத்தம் 70 சிறப்பு பணியாளர்களின் பணியிடங்களை 31.03.2026 வரையிலான காலத்திற்கு தோற்றுவிக்கவும் நில நிர்வாக ஆணையர் அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

7. மேற்காணும், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் கருத்துரு மற்றும் நில நிர்வாக ஆணையரின் பரிந்துரை ஆகியவற்றை அரசு கவனமுடன் ஆராய்ந்து திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், கல்பட்டு, ஏனம்பாக்கம், மேல்மாளிகைப்பட்டு, செங்காத்தாகுளம், எர்ணாங்குப்பம் மற்றும் திருவள்ளூர் வட்டம், வெங்கல் ஆகிய கிராமங்களில் புல எண்.49 மற்றும் பலவற்றில் உள்ள 464.27.02 ஹெக்டேர்ஸ் பரப்புடைய நன்செய், புன்செய், மானாவாரி மற்றும் 0.52.50 ஹெக்டேர்ஸ் பூமிதான நிலங்களை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ), தமிழ்நாடு அறிவு நகரம் (Tamil Nadu Knowledge City) அமைப்பதற்காக தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்பு சட்டம், 1997-ன் கீழ்/தனிநபர் பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பு செய்திடவும் மற்றும் 224.69.90 ஹெக்டேர்ஸ் அரசு புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்திடவும் நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது.

8. மேற்கூறிய நில எடுப்பு பணிகளை மேற்கொள்ள ஒரு அலகிற்கு 13 பணியிடங்கள் வீதம் 5 அலகுகள் கொண்ட சிறப்பு பணியிடங்களையும், ஒரு தலைமையிட தனி வட்டாட்சியர் அலகிற்கு 5 பணியிடங்களையும் ஆக மொத்தம் 70 பணியிடங்களை 31.03.2026 வரை தோற்றுவிக்கவும், மேற்படி நிரப்பப்படும் பணியிடங்களில் போதுமான காலமுறை ஊதியப் பணியாளர்கள் இல்லாத நிலையில், அப்பணியிடங்களை வெளிமுகமை மூலமாக ஓய்வுபெற்ற பணியாளர்களை கொண்டு நிரப்பவும், தமிழ்நாடு அறிவு நகரம் திட்டத்திற்கு மாநெல்லூர் சிப்காட் தொழிற்பூங்கா மாவட்ட வருவாய் அலுவலரை நில எடுப்பு

அலுவலராக நியமிக்கவும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு அனுமதி வழங்குகிறது:

(அ) நில எடுப்பு மற்றும் நில உரிமை மாற்றம் செய்வதற்கான உத்தேச இழப்பீட்டுத் தொகை மற்றும் நிர்வாக செலவினத் தொகை ஆகியவற்றை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(ஆ) திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர், புலங்களில் உள்ள மரங்களுக்கான மதிப்பினை வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறையிடமிருந்து பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(இ) திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் புலங்களில் உள்ள கட்டிடங்களின் மதிப்பினை பொதுப்பணித் துறையிடமிருந்து பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

9. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் தோராயமாக நிர்ணயிக்கும் நில மதிப்பினை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (டிட்கோ) வைப்பு (deposit) செய்யப்பட வேண்டும்:

"K – வைப்பீடுகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டி பெறா வைப்பீடுகள் – 8443.00 உரிமையியல் வைப்பீடுகள் – 101. வருவாய் வைப்பீடுகள் – AA. வருவாய் வைப்பீடுகள் – 801 வரவுகள் – 02 வட்டி பெறாதவை.

[IFHRMS ததொகு: 8443 00 101 AA 80102]".

10. நிலம் கையகப்படுத்தும் அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய செலவினத் தொகையை, டிட்கோ நிறுவனத்திடமிருந்து பெற்று கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் வரவு வைக்கப்படவேண்டும்:–

"0070 ஏனைய நிருவாகப் பணிகள் 60 – ஏனைய பணிகள் – 800 ஏனைய வரவுகள் CH தனியார், பொதுத் துறைகளுக்காகச் செய்யப்பட்ட நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் மத்திய அரசு தொடர்பான திட்டப் பணிக்காக செய்த நிருவாகப் பணி குறித்த பணியாளரமைப்புச் செலவை ஈடு செய்தல்– 227 வரி அல்லாத கட்டணங்கள் – 99 – ஏனையவைகள்

(ததொகு 0070–60–800–CH 22799)"

11. நிலம் கையகப்படுத்தும் அலுவலர்களுக்கான 2023–24–ஆம் ஆண்டிற்கான சம்பளம் மற்றும் ஏனைய செலவினத் தொகையை மேற்கண்ட கணக்குத் தலைப்பில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் (டிட்கோ) பற்று வைக்கப்படவேண்டும், அவ்வாறு இ–சலான் முறையில் அரசு கணக்கில் செலுத்திய பிறகு 2023–24 மற்றும் 2024–25–ஆம் ஆண்டிற்கான செலவினத் தொகையை கூடுதல் நிதியொதுக்கத்தில் புதிய கணக்குத் தலைப்பு உருவாக்கப்பட்டு வழங்கலாம்.

12. நிலக் கையகத்தில் கவரப்படும் அரசு புறம்போக்கு நிலங்களை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ) நில உரிமை மாற்றம் செய்வதற்கு முன்மொழிவினை நில நிர்வாக ஆணையர் வழியாக அரசின்

வருவாய்த்துறைக்கு அனுப்பி வைக்குமாறு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தப்படுகிறார்.

13. மேலே பத்தி 8-ல் அனுமதிக்கப்பட்டுள்ள தற்காலிகப் பணியாளர்களின் (நில எடுப்பு) ஊதிய செலவினம் மற்றும் நிதி ஒதுக்கீடு தொடர்பான கணக்கு தலைப்புகள் குறித்து இத்துறையால் பின்னர் தனி ஆணையாக வெளியிடப்படும்.

14. இவ்வாணையானது நிதித் துறையின் அ.சா.கு.எண்.20354/ தொழில்/2023, நாள் 31.05.2023-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச. கிருஷ்ணன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்:
நில நிர்வாக ஆணையர்,
நில நிர்வாகத் துறை, சேப்பாக்கம்,
சென்னை- 600 005.
மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர்.
சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ.),
மாநெல்லூர் சிப்காட் தொழிற்பூங்கா.
மேலாண்மை இயக்குநர்,
டிட்கோ, 19A, ருக்மணி லஷ்மிபதி சாலை,
எழும்பூர், சென்னை-600 008.
மாவட்ட கருவூல அலுவலர், திருவள்ளூர் மாவட்டம்.
துணை கருவூல அலுவலர், திருவள்ளூர் மாவட்டம்.
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 600 009.
மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை - 600 009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை - 600 009.
நிதி (மை.ம.ஆ.பி./தொழில்) துறை, சென்னை - 600 009.
தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக (அநமு.2/வ.செ.தி) துறை, சென்னை - 600 009.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

1/8/2023
பிரிவு அலுவலர்